# இதயத்தாகம்

யார் செய்த பாவமிது ? ஈழத் தமிழ் நாடே !
என் அருமைத் தாயகமே
அன்னன் பிரிவால் வாடுகிறேன் நான் இன்று
தாயின் பிரிவால் தவித்தழும் தனையர் எத்தனை?
சேயின் பிரிவால் கதறியழும் தாயும் எத்தனை?
சாவற்ற வீடு தேடி என் தாய்த்திரு நாட்டில் -
நானும் திரிந்தால்
ஆசிய ஜோதியவன், புத்தபிரான் சொல் கேட்டு
ஆறாத்துயருடனே கையில் மாண்டுவிட்ட மைந்தனுடனே
சாவற்ற வீடு தேடி ஏமாறி மீண்டுவந்த
தாயின் கதை போல் என் கதையும் ஆகுமப்பா!

பாரத மாதாவின் கழுத்தின்
தங்கப் பதக்கமெனப் புகழ்பெற்ற
என் அருமை ஈழத்தாய் நாடே
அரக்கு நிறப் பதக்கமாய்
இரத்த வெள்ளத்தில் - நீ
இன்று ஊறிப் போனதேனோ?
புரியாமல் தவிக்கின்றேன்!
வழி தெரியாமல் பதறுகிறேன்.

எல்லாள மன்னனவன் ஆக்கிவிட்ட ஆரம்பம்
சினங்கொண்ட துட்டகைமுனுவின் சாபத்தின் பிரதிபலிப்போ!
அந்தோ! என்னருமை அழகு மிகு யாழ்நகரே!
என் ஆசை மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பே!
யார் செய்த சதியோ! யான் அறியேன் !
மக்களவர் இதயத்தில் வீற்றிருந்த மாண்புமிகு -
நல்லூர் கந்தனும் ஓடி எங்கோ மறைந்தனனோ!
நம்மருமைக் காவல் தெய்வம் -
கோட்டை முனியப்பர் காதடைத்துப் போனாரோ!
நாம் செய்துவிட்ட பாவம் தான் என்னவோ யாமறியோம்
நம் கதையும் கேட்டிடுவீர் எம்மருமை மக்காள்.